بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை குத்து.ஃ.பா

02 February 2018

(15 Jamad'ul Awwal 1439 A.H)

# The Human Condition & Remedies

## மனிதநிலைமையும், பரிகாரங்களும்



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலகனைத்துமுள்ள முஸ்லீம் மக்களுக்கும், எல்லா தோழர்களுக்கும் சலாம் கூறிய பிறகு தஷ்ஹ்ஹீதும், தஅவசும், சூரா அல் பாத்திகாவும் ஓதிக் கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் தம் பேருரையை ஆரம்பித்தார்.

## THE SUPER BLUE BLOOD MOON OF 31 JANUARY 2018

### 2018 ஜனவரி31-ம் தேதியில் சூப்பர் ப்ளு,பிளட் மூண்

2018 ஜனவரி புதன்கிழமையன்று அசாதாரணமான ஒரு வானியல் அடையாளத்திற்கு உலகம் சாட்சியளித்திருக்கின்றது. இந்த அடையாளம் என்பது ஒரு சூப்பர் மூண், பிளட் மூண் ஆகின்றது. சூப்பர் மூண், பிளட் மூண் என்றால் உண்மையில் என்ன? இது சந்திரனின் மூன்று விசித்திரங்களின் இணைப்பாகும். இந்த நிகழ்விற்கு அல்லது இந்த தெய்வீகமான அடையாளத்திற்கு மிக சரளமாக விளக்கமளித்தால், இயற்கையின் அந்த துணைக்கோள் அந்நேரம் பூமிக்கு மிக அருகில் நெருங்கி வருகின்றது. அந்நேரம் அது நமக்கு ஒரு முழுமையான சந்திரனை(சூப்பர் மூண்) வழங்குகின்றது. அத்துடன் அது அம்மாதத்தில் முழுமையான 2-வது சந்திரனாக இருக்கின்றது. அதைப்போன்றே அந்நேரம் சந்திரனை, கிரகணமும்/ இருளும் பாதிக்கின்றது (பிளட் மூண்). அவ்வாறு அது ஒரு முழுமைபெற்ற சந்திரனாகயிருக்கின்றது. அத்துடன் அது ஒரு ப்ளு மூணுமாகயிருக்கின்றது. உலகின் சில பகுதிகளில் அது பரிபூரணமாக காட்சி தருகின்றது. அதனை நாம் பிளட் மூண் என்று கூறுகின்றோம். இந்த முன்று நிகழ்வுகளும் பூமியின் சில பகுதிகளில் மட்டுமே காட்சியளிக்கின்றது. ஆமெரிக்கா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளல் 152 வருடத்திற்கு பிறகாகும் இது நிகழ்ந்திருப்பது. ஆனால் ஐரேப்பியா இராஜியங்களிலும், பிரான்ஸ் போன்ற நாடுகளிலும், இந்த நிகழ்வு அல்லது இந்த வானியல் அடையாளம் காட்சியளிக்கவில்லை. ஆனால் 1982-ம் ஆண்டில் அது காட்சியளித்திருந்தது. ஆனால் மௌரீஷியஸில் 152 வருடங்களுக்குப் பின், நாம் இந்த நிகழ்வுக்கு சாட்சியாகயிருக்கிறோம். ஆனால் இது சில நிமிடங்கள் மட்டும் நீடித்த ஒரு முழுமைபெறாத சந்திர கிரகணமாகின்றது.

இந்த நிகழ்வு அல்லது இந்த வானியல் அடையாளம் மக்களுக்கிடையில் சர்ச்சைக்குரிய விஷயமாக மாறியிருக்கின்றது. அதன் பொருளைக் குறித்து ஒவ்வொருவரும் தங்களின் யூகத்தின் அடிப்படையில் பேசிவருகின்றனர். இது உலக முடிவின் அறிகுறியென சிலர் கூறுகின்றனர். மிக விரைவில் இரட்சகன்

தோன்றுவார் என வேறு சிலர் கூறுகின்றனர். ஆனால் உண்மை இதுவாகும், நாம் இப்போது உலக முடிவின் நாட்களில் வாழ்ந்து வருகின்றோம். மக்கள் எதிர்பார்த்திருக்கும் இரட்சகன் எற்கனவே உங்களிடையே உள்ளார். தெய்வீகமான இத்தகைய வானியல் அடையாளங்களை நீங்கள் பார்க்கும் போது, இவை இறைத்தூதரின் வருகைக்கு ஆதாரமாக தென்படும் அடையாளம் என நீங்கள் உணரவேண்டும்.. சாதாரண மனிதனைப் பொறுத்தவரையில் அவர்களின் வாழ்நாளில் இத்தகைய அடையாளங்கள் அரிதாகும். உலகில் தோன்றியுள்ள அடையாளங்களின் ரீதியை வைத்துப் பார்த்தால் உலகிலுள்ள பல்வேறு மதங்களின் தூய நூல்களின் அடிப்படையிலும் மற்றும் திருகுர் ஆன் மூலம் அல்லாஹ் நம்மை கற்பித்திருக்கும் வசனங்களின் அடிப்படையிலும் பார்த்தால், இத்தகைய அடையாளங்கள் மானிட குலம் சிந்திப்பதற்காக தோன்றிக் கொள்பவையாகும். அது வாயிலாக அவர்களின் செயல்களில் திருத்தத்தை ஏற்படுத்தவும் சுயம் சீர்திருத்திக்கொள்ளவும் ஆகும். இவ்வுலகின் இறுதி நாட்களிலாகும் நாம் வாழ்ந்திருப்பது என்ற காரியத்தை அது சுட்டிக்காட்டுகின்றது. எல்லோரும் எதிர்பார்த்திருக்கும் இரட்சகன் தோன்றியிருக்கிறார். அவர் உங்களின் இடையில் தான் உள்ளார். முஹம்மது(ஸல்) அவர்கள் கூறியதாக ஒரு கதீஸில் காணலாம். **“சந்திர கிரகணம் என்பது எவருடையவும் பிறப்பையோ இறப்பையோ தெரியப்படுத்துவதற்கான அறிகுறியல்ல. அவ்வாறு அது நிகழ்வதுமில்லை”**. ஆனால் அன்னார் அதை தொடர்ந்து கூறியுள்ளார், வாக்களிக்கப்பட்ட மஸீஹின் (மஹ்தி) வருகைக்கு அறிகுறியாக இரண்டு கிரகணம், அதாவது ஒரு சந்திரகிரகணமும் அதே மாதம் சூரிய கிரகணமும் நிகழும். இவை இரண்டும் ரமலான் மாதத்தில் தோன்றும். இது அவ்வாறே மஹ்தியின் காலகட்டத்தில் அதாவது ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்களின் கால கட்டத்தில் நிகழ்ந்தது. அதைப்போன்றே இந்த எளியவனாகிய கலீ∵.பத்துல்லாஹ்வின் காலத்திலும் தோன்றியிருக்கின்றது. இந்த வானியல் அடையாளங்கள்,(சூப்பர் மூண், பிளட் மூண்) வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது(அலை) அவர்கள் அறிக்கை விடுக்கும் சில வருடங்களுக்கு முன்னதாக வெளிப்பட்டுக் கொண்டது. எனவே இந்த

இறையடையாளம் அனைத்தும் உலகத்தை குலைக்கும் கொடூரமான சம்பவங்களின் அறிகுறியாக இருக்கின்றன. குறிப்பாக அல்லாஹ் தேர்ந்தெடுக்கும் நபரை மக்கள் அங்கீகரித்துக்கொள்ளவில்லையென்றால், அல்லாஹ்வை மறந்து கொள்வதுடன், பொய்தெய்வங்களை வணங்கிக் கொள்ளவும் இறைவனுக்கு இணைவைத்துக்கொள்ளவும் செய்து கொண்டால்!

## 183 YEARS SINCE THE ABOLITION OF SLAVERY

### அடிமைத்தனத்தை ஒழித்துக்கட்டி 183 வருடங்கள் ஆகின்றது.

உங்கள் அனைவருக்கும் தெரிந்தது போன்று நேற்றைய நாள் பொது விடுமுறையாகயிருந்தது. அடிமைத்துவத்தை ஒழித்து தற்போது 183 வருடங்களாகின்றது. நம் முன்னோர்கள் (தத்தா-பாட்டிகள்) எண்ணற்ற துன்புறுத்தல்களுக்கு ஆளாகியிருந்தனர். கஷ்டங்களும் மற்றும் பெரும் துயரங்களும் எதிர் கொண்டனர். அவர்களின் அடிப்படை உரிமைகள், மனித உரிமைகள் போன்றவை எட்டி மிதிக்கப்பட்டிருந்தது. 1800களில் உலக நாடுகள் யாவும் ஒன்றின் பின் ஒன்றாக அடிமைத்துவத்தை ஒழிக்க ஆரம்பித்திருந்தது. ஆனால் இஸ்லாமை பாருங்கள், அது எவ்வளவு சரியான மதமாகயிருக்கின்றது. முதல் முதலில் அரேபியாவில் 7-ம் நூற்றாண்டில் மிக உன்னதமான தூதரின் வருகையுடன் உலகம் காணாத வகையில்-அடிமைத்துவத்தை ஒழிப்பதற்கு இறைவனிடமிருந்து கிடைத்த கட்டளைகள், மனித குலத்தை கற்பிப்பதற்கு கிடைத்த கட்டளைகள், இவையாவும்-அடிமைத்துவத்தை அகற்றுவதற்கான மிக பெரிய நடவடிக்கையாக அமைந்தது. ஏனெனில் அவ்வேளைகளில் அடிமைகளை விலங்குகளைப்போன்று எண்ணப்பட்டிருந்தது. அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்)வின் வருகையுடன், அடிமைகள், அதாவது எந்த ஓர் உரிமைகளும் இல்லாதிருந்தோர்கள் தங்களின் உரிமைகளையும் மற்றும் மனித உரிமைகளையும் பெற்றுக் கொண்டனர். திருமறையின் போதனைகள் மூலமும் திருத்தூதரின் நடைமுறை மூலமும் அடிமைகளை சுதந்திரமாக்குவதற்கான வாசலை அல்லாஹ், திறந்து கொண்டான். அதன் வாயிலாக மனிதர்கள் என்ற நிலையில் அவர்களுக்கு, தங்களின் கௌரவத்தையும் சுதந்திரத்தையும் திரும்ப

பெற்றுக்கொள்ளமுடிந்தது. “அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்” நம்மை முஸ்லீம்களாக்கியதற்கு நாம் அல்லாஹ்விற்கு நன்றியை கூறவேண்டும். அனைத்துவிதமான மனித உரிமைகளையும் நமக்கு அவன் அளித்திருக்கின்றான். உண்மையில் நாம் மிக பெரிய அதிர்ஷ்டசாலிகளாகயிருக்கின்றோம். கடந்த கால மக்களுடன் ஒப்பிட்டுப் பாரத்தால்! அம்மக்கள் எதிர் கொண்ட வறுமைகள், அதைப் போன்றே அவர்களை சதி திட்டத்திற்கு ஆளாக்கிக் கொண்ட பின் அல்லது பலனை பயன்படுத்தி அவர்களை அடிமைகளாக்கி அழைத்து செல்லும் வேளையில், அவர்களை பிறருக்கு விற்கும் வேளையில், அடிமைகளாயிருக்க அவர்களை வற்புறுத்தும் வேளையில், அவர்களின் தாய் நாட்டிலிருந்து அவர்களை பிழுது எறியும் வேளையில், பிற நாடுகளில் அவர்களை படகுகள் வழி கடத்திச்செல்லும் வேளையில், அந்நாடுகளில் விலங்குகளைப் போன்று அவர்கள் வேலை செய்யும் வேளையில் அவர்களின் மன நிலை எவ்வாறு இருந்திருக்கும்? இத்தகைய வேதனைகளை சந்தித்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரியட்டும். அத்தகைய வருத்த கட்டங்களில் அவர்கள் கைக்கொண்ட பொறுமைக்கும், அமைதிக்கும், தியாகத்திற்கும் போதுமான நற்கூலியை இறைவன் அவர்களுக்கு வழங்கட்டும். ஆமீன்.

## THE HUMAN CONDITION & REMEDIES

### மனித நிலைமையும், பரிகாரமும்

உலகம் பேரிடர் தரதக்க வேகத்தில் வளர்ந்து வருகிறது. தொடர்ந்து அது நவீனமயமாக்கப்படுகிறது. மேலும் உலகம் சிறியதாகிவருகின்றது. வாழ்க்கை ரீதிகள் சுருங்கிவருகின்றது. ஒருவட்டமேஜைக்கு சுற்றும் ஒன்று சேருவது போல் உலக மக்கள் நெருங்கிவருகின்றனர். தங்களின் கருத்துக்களையும் மற்றும் வாழக்கை ரீதிகளையும் (ஒன்றுக்கொன்று) பகிர்ந்துகொள்ளும் அளவிற்கு அதுவளர்ந்து வருகிறது. ஆனால் செல்வத்திற்கும் அதிகாரத்திற்கும் இடையிலான போட்டியில், செல்வந்தர்கள் மேலும் பணக்காரர்களாக மாறுகின்றனர். ஏழைகள் மேலும் ஏழைகளாக மாறுகின்றனர். படைத்தவன் வேறொன்று தீர்மானிக்கும் வரையில் இவ்வுலகம் தொடாந்தும் நிலை நிற்கும்.

பணக்காரனாகட்டும் ஏழைகளாகட்டும் ஒவ்வொருவரும் தங்களுடையதான வழியில் முயற்சிக்கின்றனர். ஆனால் **ஒரு நாட்டின் குடிமக்களின் உடல்நலம், பொழுதுபோக்கு, உணவு மற்றும் அமைதிக்கான செலவு போன்றவையை குறித்தெல்லாம் நம்மைச்சார்ந்த எத்தனை பேர்கள் சிந்திக்கின்றார்கள்? ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக பிரார்த்தனை மூலம் படைத்தவனை நினைவு கோருவதற்கு தங்களின் விலைவாய்ந்த நேரத்திலிருந்து எவ்வளவு நேரத்தை அவர்கள் செலவிடுகிறார்கள்?** செல்வந்தர்கள் தங்களின் வாழ்க்கையை அமைதியாக கொண்டு செல்வதில் அவர்களுக்கு எந்த பிரச்சனையும் இருப்பதில்லை. மறுபுறம் ஏழை, அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எந்த நாட்டைச் சார்ந்தவர்களாகயிருந்தாலும் சரி, எப்பொழுதும் வறுமையில் தான் வாழ்கின்றனர். அத்துடன் பஞ்சம், உடல் நலமின்மை, வீடின்மை, வேலையின்மை போன்றவை அவர்கள் எதிர் கொள்கின்றனர்.

எனினும் மக்கள், தங்களின் சூழ்நிலை எவ்வாறிருந்தாலும் அதற்கேற்ப வாழ முயற்சிக்கின்றனர். வறுமையாலும் துயரத்தாலும் நசுக்கப்படுவதால், சிலர் வாழ்க்கையை முடித்துக்கொள்ள விரும்புகின்றனர். ஆனால் வாழ்க்கை அல்லது மரணம் நம் கரங்களில் அல்ல. அது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் உரிமைக்குட்பட்டதாக இருக்கின்றது.

ஆனால் பின் ஏன் இத்தனை கவலைகள்? அனைத்தையும் கட்டிக் காப்பவனும், எல்லாவற்றையும் அறிபவனுமாகிய அல்லாஹ் நம்மை நேசிக்கவில்லையா? நம் வாழ்க்கை முறைகளை அவன் மதிக்கவில்லையா? உண்மையில் அவ்வாறல்ல, நமது அன்புக்குரிய தூதர் முஹம்மது(ஸல்)வின் ஒரு கதீஸில் கூறப்பட்டிருக்கின்றது. நாம், மனிதர்கள் என்ற நிலையில் நம்மை படைத்தவன் மீதான கடமைகளை திடீரென மறந்து செல்கின்றோம். அது மூலம் எல்லாம் தலை கீழாகின்றது. சூழ்நிலைகள் மாறும் போது வாழ்க்கை உறுதியற்றதாக பரிணமிக்கின்றது. அத்துடன் மன அழுத்தம், பதட்டம், கோபம், கவலை, சந்தேகம் போன்றவை ஏற்படுகின்றது.

உலகின் பெரும்பான்மையான மக்களும் வறுமையில் வாழுகின்றார்கள். மிகச்சிறிய சதவீதம் செல்வந்தர்களாகயிருக்கின்றனர். அந்த சிறுபான்மையானவர்கள் இந்த தற்காலிகமான உலகை கட்டுப்படுத்திக் கொள்கின்றனர். செல்வங்கள் இருப்பதால் மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்று எண்ணுகின்ற சிலர் தங்களை சுயம், அரைத் தெய்வங்கள் என்று நினைக்கின்றார்கள். நான் மிக தெளிவாக கூறுகின்றேன். பணக்காரர்களானாலும் சரி, ஏழைகளானாலும் சரி, நாம் இரு பிரிவினரும் ஒரே வகையான பயத்துடன் தான் வாழுகின்றோம். இரு பிரிவினரும் ஒரே தரத்தில்பட்ட வேதனையுடனும், ஒரே வகையிலான மனக்கவலையுடனும் இருக்கின்றோம். நாம் இன்று 21-ம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கின்றோம். எல்லா இடங்களிலும் பௌதீக வாதம் நிலவுகின்ற ஒரு குழப்பமான நேரமிது. உம்மத்தில் கூட! பொருள் வகைகள் என்பது இவ்வுலகிற்கு மட்டும் பயன்படுகின்ற ஒன்றாகும். மறுமைக்காக நாம் என்ன தயார் செய்துவைத்துள்ளோம்?. அதற்காக நாம் என்ன செய்திருக்கின்றோம்? இங்கே பூமியில் மொத்தத்தில் குழப்பமாகயிருக்கின்றது. இதயத்தில் காயத்தை ஏற்படுத்தும் பாதையில் அது நம்மை அழைத்துச்செல்கின்றது. பலவீனமான ஆன்மா, அது காரணமாக உடைந்து போகின்றது.

நாம் மருத்துவச் செய்தியை(Medical News) மட்டும் பின்பற்றுகின்றோம். மருத்துவ உலகை பற்றிய அறிவுக்காக நாம் வெம்புகின்றோம். விஞ்ஞானிகள், அனைத்துவகையான மன அழுத்தத்தையும் எதிர்கொள்வதற்கான மருந்துகளை உற்பத்தி செய்கின்றனர். நவீன உலகில் நோய்களை தடுத்துக்கொள்வதற்காக அளவிற்கு அதிகம் மருந்துவகைகள் பயன்படுத்தப்படுகிறது. சில நேரங்களில் அம்மருந்துகள் பக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அது மூலம் சிக்கலான நிலைமை மேலும் சிக்கலாகின்றது. அவர் பணக்காரராகயிருந்தாலும் சரி, ஏழையாகயிருந்தாலும் சரி அவர் செல்வது தனியார் மருத்துவமனையாகட்டும்,அல்லது அரசு மருத்துவமனையாகட்டும் நோயாளிக்கு போதுமான மகிழ்ச்சி கிடைப்பதில்லை. இனி ஒரு வேளை கிடைத்தால் கூட, அது நிரந்தரமற்றதாகயிருக்கின்றது. பலனளிக்கும் ஒரேயொரு தீர்வு மட்டுமே

உள்ளது. உண்மையில் அது மிகவும் பயனளிப்பதாகும். ஆனால் அதை (மக்கள்) புறக்கணித்திருக்கின்றனர், மறந்திருக்கின்றனர், ஒதுக்கிவை த்திருக்கின்றனர். அது என்னவென்றால் எல்லாம் வல்ல அல்லாஹ்வின்பாலான ஒரு அழைப்பு.

ஆம்! இறைவன் பால் திரும்பிக்கொள்ளுங்கள்! அவன் இரட்சகனாகயிருக்கின்றான். **நோய்களுக்கு சுகமளிப்பவனாகயிருக்கின்றான். பாதுகாப்பளிப்பவனாகயிருக்கின்றான். அவன் அருளுக்குரியவனாகயிருக்கின்றான். அவன் அனைத்து வழிகளையும் திறப்பவனாகயிருக்கின்றான், கட்டணம் இல்லாமல், எந்த சந்திப்பும் இல்லாமல் அவன் நமக்கு சுகமளிப்பவனாகயிருக்கின்றான். அவன் எப்போதும் கூறும் காரியமாவது, எந்நேரமும் அவனை நினைவுகொள்ள வேண்டும் என்பதாகும். நம் கவலைகளை கேட்பதற்கு அவன் எந்நேரவும் தயாரகயிருக்கின்றான். நலமற்ற நாம், எப்போதும் கடைபிடிக்கவேண்டியது, அவன் மீதான திடநம்பிக்கையும் நேர்மையுமாகும். அவன் மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள். அவனது அற்புதங்களிலும், அவன் குணமளிப்பதிலும் நம்பிக்கைக்கொள்ளுங்கள். அதற்கு நாம் தயாராக உள்ளோமா? ஆம் அதற்கு நாம் தயாராக வேண்டும். நம்மை படைத்தவன் மீது நாம் முழுமையாக நம்பிக்கைக்கொள்ளவேண்டும். எல்லா படைப்பினங்களிலும் வைத்து நாம் முற்றிலும் அதிர்ஷ்டசாலிகளாக இருக்கின்றோம். அல்லாஹ் நமக்கு அனைத்தையும் வழங்கியுள்ளான். நாம் எதையும் அவனுக்கு வழங்காமலிருந்தும்! ஆகவே நாம் கவனத்துடன் செயல்படவேண்டும் என்பது நம் கடமையாகும். மிதமான நிலையிலும் மிக எளிமையுடனும்!**

மிக சிறந்த பொருட்களும், முற்றிலும் சிறந்த வேலைகளும், மிகப் பெரிய பாதுகாப்பும் மனிதா்களுக்காகும். எதைப்பற்றியும் மனிதன் புகாா் செய்யக்கூடாது என்பதால் எல்லாவற்றையும் அவன் மனிதனுக்கு வழங்கியிருக்கின்றான். அதற்கொரு எல்கையேயில்லை.

காரியங்கள் இவ்வாறு இருப்பினும் மனிதனின் ஆன்மா ஒரு போதும் அமைதியிலல்ல. ஆன்மா எந்நேரமும் பதட்டமாகயிருக்கின்றது, பயத்துடன்

இருக்கின்றது. உடம்புக்கு மகிழ்ச்சியும், ஆனந்தமும் உல்லாசமுமில்லை. தம் அனுதின வாழ்க்கையில் முழுமையாக அவர் இருளை மட்டுமே காண்கின்றார். அமைதியில்லை. அது ஒரு திசைத்தவறிய படகைப்போன்றாகியுள்ளது. மிகப்பெரிய அலைகளின் உதவியால் அது சலித்துக்கொண்டிருக்கிறது. எந்த நேரமும் எதுவும் நிகழலாம். அனைத்துவித பொருள் வளங்களையும் பயன்படுத்திய பிறகும், சாதகமான எந்த பலனும் இல்லை. மனிதனை துவாலைப் போன்று தூக்கி வீசப்பட்டிருக்கின்றது. அவன் உதவியற்றவனாகயிருக்கின்றான். எந்த வித ஆற்றலும் இல்லாதவரைப் போன்று அவன் பரிணமித்திருக்கின்றான். ஆனால் இத்தகைய பாதகமான சூழ்நிலையில் கூட எந்த ஓர் முஸ்லீமுக்கும் உண்மையில் பரிகாரம் உண்டு. அல்லாஹ்! அல்லாஹ்! அல்லாஹ் மட்டும்!

உம்மத்தைச் சார்ந்த நாம் ஒவ்வொருவரும் செங்குத்துப் பாறையின் வரம்பை அடைந்துவிட்டோம். இச்சூழ்நிலையில் நாம் ஊக்கத்தையிழக்காமலிருக்க வேண்டும். உம்மத்தைச் சார்ந்த நாம் ஒவ்வொருவரும் ஆற்றலைத் திரும்பப் பெற வேண்டும். அதற்காக படைத்தவனின் பால் நாம் திரும்ப வேண்டும். தலை முதல் பாதம் வரையில் மனிதனை நன்கு அறிபவனாகிய ஒரே ஒருவன் அவன் மட்டுமாகின்றான். அது மட்டுமே நேர்வழி. இந்த மனிதனை உருவாக்கியதும்/படைத்ததும் அவனல்லவா? அவனது ஆன்மாவை அவர்களில் நுழையவைத்ததும் அவனல்லவா? அவர்களுக்கு ஆற்றலளிப்பதும் அவனல்லவா? அவர்களுக்கு தைரியம் வழங்கியதும் அவனல்லவா? நல்லதையும் கெட்டதையும் பகுத்தறிவதற்கான திறனை வழங்கியதும் அவனல்லவா? முழுமைப்பெற்ற படைப்பாளன் என்ற நிலையில் மனிதனைக் குறித்தும், அவரது மனதைக்குறித்தும் மிக நன்கு அறிபவனும் அவனல்லவா? அவன் வேதனைகளை அறிபவனாகயிருக்கின்றான். உலகிலுள்ள அனைத்து மனிதர்களின் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அவன் அறிகின்றான். பூமியைச்சார்ந்த நாம் அனைவர்களுடையவும் செயல்களைக்குறித்தும் அவன் கரங்களில் ஒரு ரெஜிஸ்டர் உள்ளது. நம்மிடமிருந்து பணத்தை கொள்ளைச்செய்ய முயற்சிப்பவர்களின் வஞ்சகத்தைப்

பற்றிய ஒரு சித்திரமும் அவனிடம் உண்டு. ஒவ்வொரு நோய்களுக்கு தேவையான சிகிட்சையும் அவன் பாதையில் குடி கொள்கின்றது.

அல்லாஹ்வின் இப்பாதையில் எந்த ஏமாற்றமும் இல்லை. அபாயமில்லை. வீணாண செலவுகள் இல்லை. ஆம் செலவுகள் இருக்கும், அச்செலவுகள் என்பது உங்களின் அனைத்து சக்திகளையும் செலவு செய்து, அல்லாஹ்வின் கருணையை பெற்றுக் கொள்ள வேண்டும். அதுவே வாழ்க்கையின் உண்மையான (இலட்சியம்)

**"அல்லாஹ்வை நினைவு கூர்வதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன"(13-29)**

இஸ்லாம் முழுமை பெற்ற மார்க்கமாகும். இறைவன் அதிகமளவிற்கு நேசிக்கும் மார்க்கவும் அதுவேயாகும். இஸ்லாம் சிலை வணக்கத்தை அங்கீகரிப்பதில்லை. அடிப்படையற்றற சட்டங்களையும் அது கைக்கொள்ளுவதில்லை அல்லது முக்கியமற்ற சடங்குகளையும் அது ஊக்குவிப்பதில்லை.

**நாம் முஸ்லீம்களாகயிருக்கின்றோம். நம் புனிதமான கடமை, ஏக இறைவன் மீது நம்பிக்கைக் கொள்ளுதல் என்பதாகும். எல்லா நேரங்களிலம் நாம் அவனிடமே திரும்ப வேண்டும். எந்த நேரமும் அவனை மட்டுமே வணங்க வேண்டும். அதற்கு எந்த வித ஏற்றக்குறைவும் இருக்கக் கூடாது. அல்லாஹ், இரக்கமுடையவனாகவும் அருளுக்குரியவனாகவும் இருக்கின்றான். அவனது ஞானத்திற்கு எல்கையே இல்லை. அவன் தம் குடிமக்களை ஒருபோதும் கைவிடுவதில்லை. குறிப்பாக அவனது சமுதாயத்தை! புறக்கணிப்பு, சோம்பல், கவனமின்மை, போன்றவையால் நாம் அவனை மறந்து விட்டாலும் சரி அவன் நம்மை கைவிடுவதில்லை. ஏனெனில் அல்லாஹ் அவ்வளவு நம்மீது நேசமாகயிருக்கின்றான். பலன் தரும் வகையிலான பல்வேறு திறனைக் கொண்டு அவன் நம்மை வடிவமைத்திருக்கின்றான். திருக்குர்-ஆன், திரு தூதர்(ஸல்) அவர்களின் நடைமுறை போன்றவை அவன் இந்த சமுதாயத்தின் மீது பொழிந்த அருட்களாகும். ஆகவே இவ்விஷயத்தில் நாம் அதாவது உம்மத்தைச் சார்ந்த நாம் விழிப்புணர்வுடையவர்களா? பலனடையும் வகையில் இவையை பயன்படுத்த வேண்டியது எவ்வாறு என நாம் புரிந்திருக்கின்றோமா? இறையச்சத்திற்காகவும், நம் ஆன்மாவுக்காகவும், நம் உடலுக்காகவும், நம் நம்பிக்கையை நிலை நாட்டுவதற்காகவும் நாம், நம் புத்தியைப் பயன்படுத்துகின்றோமா? திருக்குர் ஆனையும் திருசுன்னத்தையும் நாம் பயன்படுத்துகின்றோமா? மனிதனும் இறைவனும் ஒன்றுக்கொன்று அதாவது பிரிந்துபோகாத வகையில் ஒரு பந்தத்தை (தன்னை படைத்தவன் மீது) அமைத்துக் கொள்ளுதல் என்பதே இஸ்லாமின் முதல்படியான போதனை. இந்த பந்தம் என்றென்றும் நிலை நிற்க**

**வேண்டும். எங்கு மன அமைதியிருக்கின்றது அங்கு மன குழப்பங்கள் குணமாகின்றது. இந்த தற்காலிகமான உலகில் ஏதேனும் வகையிலான துரதிர்ஷ்டம் நம்மை வந்தடைந்தால்க் கூட இறைவனிடமான இந்த பந்தம் (இருந்தால் அது) முஸ்லீம் உம்மத்தை பாதுகாத்துக் கொள்ளும். உம்மத்தை சார்ந்த ஒவ்வொருவருடையவும் இதயத்தில் இந்த பந்தம் நிலை நிற்க வேண்டும்.** நமக்கு தேவையான உறுதியை வழங்குபவன் எல்லாம் வல்ல அல்லாஹ்வாகயிருக்கின்றான். நமக்கு பிரச்சனைகள் வரும்பொழுது அவையை அவன் பரிகரித்துக் கொள்கின்றான். நம் கவலைகளை நீக்கி கொள்கின்றான்.

இந்த இறை உடன்படிக்கையிலிருந்து ஒரு முஸ்லீம் விலகிசென்றால், தம் பிரச்சினைகளைப் பரிகரித்துக் கொள்ள தனக்கு முடியுமென்று சுயம் தீர்மானித்துக் கொண்டால் அது அவரது ஈமானை அழித்து விடுகின்றது. பிறகு ஈமானில்லாத ஒரு முஸ்லீம் என்ற பெயர் மட்டுமே எஞ்சும். ஆகவே அல்லாஹ்வுமாக பந்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு நமக்கு முடிந்ததெல்லாம் செய்ய வேண்டும். நம் அமைதியின் ஊற்று அவன் மட்டுமாகின்றான். அமைதியுடன் நாம் வாழ விரும்புகின்றோம் என்றால் சோதனைக் கட்டங்களில் கூட அவன் மீது நம்பிக்கை வைத்து கொள்ள வேண்டும். நம்மை படைத்திருப்பவன் அவனாவான். நமக்கு வெற்றி பெற முடிந்துவிடட்டும். நமக்கு உள்படையான அமைதியின் வாசனை திறக்க முடிந்துவிடட்டும். அல்லாஹ்வின் திருப்தியை நமக்கு ஈர்த்துக் கொள்ள முடிந்துவிடட்டும் இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

**Translated by:**
*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663